**கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான மூன்றாவது மேலதிக நிதியளிப்பம் - 2022**

---

கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான மூன்றாவது மேலதிக நிதியளிப்பின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 செப்தெம்பர் 24 ஆம் திகதிய பிஏடி 4691 ஆம் இலக்க உலக வங்கி அறிக்கையின் 40 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. கொவிட்-19 தடுப்பூசிகளுக்கான மலிவு மற்றும் சமமான அணுகலை விரைவுபடுத்துதல் மற்றும் தடுப்பூசி முறைமையை வலுப்படுத்துவதன் மூலம் இலங்கையில் பயனுள்ள தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த உதவுதல் மற்றும் தாய் செயற்திட்டத்தின் கீழ் தயார்நிலை மற்றும் பதிலளிப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துதல் என்பன இந்த செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,000 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 செப்தெம்பர் 27 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| **இல.** | **கணக்கீட்டுக் குறைபாடு / கணக்காய்வு விடயம்** | **தொகை ரூபா மில்லியன்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட முன் இறுதிக் கட்டணம் (Front end fee) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | 50 | 2022.03.09 இல் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் செயற்திட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்ட ரூபா 50,008,375 முன்-இறுதி-கட்டணம் 2022 மார்ச் மாதத்தில் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2022 மார்ச் மாதத்திற்காக பெப்ரவரி மாத செலவினக் கடிதம் மற்றும் செலவின அறிக்கையின் சான்றிதழும் உங்கள் தகவலுக்காக இணைக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் கணக்கு பேணப்படுகின்ற திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து மீள்நிரப்பு செய்யப்பட்ட தொகை சரிபார்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 5 இன் 43(அ) பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் வெளிநாட்டு கடன் தொடர்பான நாணயமாற்று சமப்படுத்தல் சீராக்கங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 13,546 | கருத்துரை வழங்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழுக் கூட்டம் சுற்றறிக்கையின் பிரகாரம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் காலரீதியாக செயற்திட்ட வழிகாட்டல் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட வழிகாட்டல் குழுக் கூட்டம் நடாத்தப்படுதல். |
| (ஆ) | உலக வங்கி செயற்திட்ட ஆவணத்தின் பத்தி இலக்கம் 41 | செயற்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வு சுகாதார அமைச்சால் முகாமை செய்யப்படும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுப்படுத்தல் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் செயற்திட்ட செயற்பாடுகளின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம 2022 யூலை 04 இல் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்து ரூபா 860,690 தொகையை சம்பளமாக செலுத்தியிருந்தது. | 2022 யூலை 4 இல் உள்ளகக் கணக்காய்வளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். AF III செயற்திட்ட ஆவணத்தின் 41 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வாளரால் செயற்திட்டத்தின் உள்ளகக் கணககாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | உலக வங்கியின் செயற்திட்ட ஆவணத்தின் அறிவுறுத்தலைப் பின்பற்ற வேண்டும் |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 சர்ச்சைத்தன்மையான விடயங்கள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| 2020 திசெம்பர் 01 முதல் 2021 செப்தெம்பர் 27 வரை அரச மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களுக்காக இந்த செயற்திட்டம் ரூபா 372 மில்லியனை செலுத்தியிருந்தது. மருத்துவ உபகரணக் கொள்வனவிற்கான தொடர்புடைய தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய பெறுகை ஆவணங்கள், கொள்வனவுக் கட்டளைகள், இருப்பு, பெறுவனவுகள், விலைப்பட்டியல்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், விநியோகப் பட்டியல் என்பன அரச மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்திற்காக பெறப்படும். | அந்த ஆவணங்கள் செயற்திட்ட முகாமைத்துவ அலகுடன் பேணப்பட வேண்டும். |

T